**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2022**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 09.02.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகன் (PW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | முத்துக்குமாரசாமி |
| கிராமம்: | தேனூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 56/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.40)**

1. தாவா என்பது பணம் கொடுக்கல் வாங்கல் வழக்காகும். வா.சா.ஆ.1ல் எந்த தேதியில், எந்த இடத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் 15.07.2019ல் வாதியின் வீட்டில் கையெழுத்து செய்தேன். மேற்கண்ட விபரத்தை எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வாதி எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் அண்ணா பஜார், கொண்டல் என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

2. வாதிக்கு பிரதிவாதி வட்டியுடன் கொடுக்க வேண்டும் என பிராதில் கேட்டுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா கடனுறுதி சீட்டை எழுதியது யார் என்றால் வாதியின் மகள். நான் கையெழுத்து செய்த கடனுறுதி சீட்டில் ரூ.60,000/– தான் எழுதி இருந்தது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை போலவே நிறைய பேரிடம் கொடுக்கல் வாங்கல் செய்கிறார் என்றால் தெரியும். அந்த கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளிலும் நான் தான் கையெழுத்து செய்வேன் என்றால் சரியல்ல.

3. வாதியிடம் கடன் வாங்கும்போது கூட வந்தது யாரென்றால் பிரதிவாதி மட்டும் தான் வந்தார். கடந்த 05.05.2018ல் வாங்கிய கடனை பிரதிவாதி வாதியிடம் செலுத்திவிட்டார் என்றும், அந்த கடனுக்காக கொடுத்த கடனுறுதி சீட்டை வைத்து, இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு தெரியும் என்றால் அந்தளவிற்கு தெரியாது, பழக்கம் உண்டு.

4. பிரதிவாதி பெண் என்பதால் வாங்கிய பணத்தை மறைத்து விட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய முழு விபரம் தெரியாமல் நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.51)**